கொண்டு வந்ததற்குப் பின்னர் வேலைக்கு எடுத்தவர்களுக்கு இப்போது நான் குறிப்பிட்டபடி ரூ.2,300 என்ற அளவில்தான் அடிப்படைச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கமிட்டி குறித்து, தாங்கள் தனியாகக் கேள்வி கேட்டால் அதற்கு விரிவான பதிலைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 195, திரு. மா. இராஜசேகர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

195—

மூலிகை மருந்துத் தொழிற்சாலை

***8202—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் பயிராகும் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராஜபாளையம் தொகுதியில் பயிராகும் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. இராஜசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி— எனது இராஜபாளையம் தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் ஐயனார் கோயில் மலை அருகில் நோய் தீர்க்கும் மூலிகைச் செடிகளும், மரங்களும் அதிகமாக உள்ளன. மூலிகையைப் பாதுகாக்க— மூலிகைத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய முன்வருகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும்

2002 ஏப்ரல் 22]

தொழிற்சாலைகளை அமைக்க நல்ல திட்டங்களுடன் தொழில் முனைவோர்கள் முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கம் அளித்து தொழில் தொடங்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலைகள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட வட்டாரப் பகுதிகளில் அமையுமாயின் அந்த நிறுவனங்களுக்கு தகுதியின் அடிப்படையில், 15 சதவிகிதம் மாநில முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூபாய் 15 இலட்சம் வழங்கப்படும் என்பதையும், மிகவும் பின்தங்கிய பகுதிகளிலே 20 சதவிகிதம் மாநில முதலீட்டு மானியம் அதிகபட்சமாக 20 இலட்சம் ரூபாயை அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்து அரசு சார்புடைய தொழிற்பேட்டையில் தொழில் வளாகங்கள் மற்றும் கூட்டுறவு தொழிற்பேட்டைகளில் அமைந்துள்ள நிறுவனங்களுக்கும் 15 சதவிகிதம் மாநில முதலீட்டு மானியம் அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு குறிப்பாக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் இந்திய முறை மருத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்கின்ற உணர்வோடு பல்வேறு நல்ல திட்டங்களை ஆளுநர் உரையிலே கூறி இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்திய முறை மருத்துவத்தினுடைய வளர்ச்சியைக் கருத்திலேகொண்டு, தமிழகம் முழுவதும் மூலிகைகள் எங்கெங்கே நிரம்பக் கிடைக்கின்றன; எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன தரமான மூலிகைகள் கிடைக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வது மட்டுமல்லாமல், அவற்றைப் பதப்படுத்தி இங்கேயே தரமான மருந்துகளை விநியோகிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் தமிழக அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 50 ஆயிரம் ஹெக்டேர் நிலம் மேம்படுத்தப்படுவதாக அறிவித்திருக்கிறீர்கள். தரிசு நிலங்களிலே உற்பத்தியாகின்ற நூற்றுக்கணக்கான மூலிகைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளிலே அந்த மூலிகைகளைப் பயிரிட்டு அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சியையும், தரமான மருந்துகளை வழங்குவதற்கான முயற்சியையும் அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குமாரதாஸ், ஒன்று வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், ஒன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கும் கேள்வி போட வேண்டும்.

வினா எண் 196, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

196—

மாணவர் விடுதி

***6294—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் அரசு உயர்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான தங்கும் விடுதி அமைக்க நடப்புக் கல்வி ஆண்டில் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கழகக் காவல் தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தனியார் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்குப் போதிய அடிப்படை வசதிகளுடன் அரசின் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், அரசின் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு போதிய அடிப்படை வசதிகள் செய்வதற்கும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதாலும் தற்போதைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டும், விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், நல்லான்பிள்ளைபெற்றாள் உயர்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தொடங்க தற்போது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.